# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

## ஆணை நாள். 06.10.2026

## முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : CP -5498/A/2024**

திரு. கோவிந்தன் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
மேட்டூர்,
சேலம் மாவட்டம் – 636 401..

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 06.10.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. கோவிந்தன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு எஸ். செல்லத்துரை, பொதுத் தகவல் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், மேட்டூர், சேலம் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 21.08.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், மனுதாரர் மேட்டூர் சார் ஆட்சியர் 23.04.2024 தேதியிட்டு அனுப்பிய ஓமு.392/2024–சி குறிப்பாணை சம்பந்தமாக அலுவலக நடைமுறை விதிகளின்படி ஓமலூர் வட்டாட்சியர் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் பதிந்த பதிவுருகள், ஆவணங்கள், கடிதங்கள், மின் அஞ்சல்கள், கருத்துரைகள், ஆலோசனைகள், இதழ் செய்திக்குறிப்புகள், சுற்றறிக்கைகள், ஆணைகள்குறிப்பேடுகள், ஒப்பந்த புள்ளி விவரங்கள், குறிப்புகள் அடங்கிய

தாள்கள் மாதிரிகள் மற்றும் மின்னணு வடிவில் அமைக்க பெற்றுள்ள விவர குறிப்புகளையும் மற்றும் இதர வடிவங்களில் உள்ளடக்கப்பட்ட விவரங்களையும் அறிக்கையின் நகலையும் தகவல்களாக வழங்கக் கோரி 9 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்

3. பொது தகவல் அலுவலர் 15.10.2024 நாளிட்ட கடிதத்தின்படி பதில் வழங்கியுள்ளார், பொது தகவல் அலுவலரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தினால் 01.10.2024 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர் 15.11.2024 நாளிட்ட பிரிவு 18(1)–ன் கீழ் புகார் மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 06.10.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 20.08.2024 மற்றும் 15.06.2026 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரர் 03.10.2026 நாளிட்ட மின்னஞ்சல் வாயிலாக தனக்கு பொதுத் தகவல் அலுவலரால் முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது என ஆணையத்தில் தெரிவித்துள்ளார். அதனை இவ்வாணையம் ஏற்று, இப்புகார் மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் CP-5498-A-2024</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர்,
சேலம் மாவட்டம் – 636 401.

**<u>மனுதாரர்:</u>**
திரு. கோவிந்தன்
1/13, திமிரிக்கோட்டை காட்டுவளவு,
பச்சனம்பட்டி கிராமம்,
ஓமலூர் வட்டம்,
சேலம் – 636455

Copy to File
Je/PA 06.10.2026